18 JAN 2001
மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 05 வியாழக்கிழமை (18-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 30

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
சாறிகளும்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி
(கி-1045)

★ யாழ். பல்கலைக்கழகம் எழுச்சிக் கோலம் பூண்டது

# தமிழர் தாயக உரிமை உணர்வை பிரதிபலித்த "பொங்கு தமிழ்" நிகழ்வு!

### பாதுகாப்பு கெடுபிடிகள் மத்தியில் இடம்பெற்றது

(யாழ். நிருபர்)

**சமாதானத்தை வலியுறுத்தியும், தமிழ் பேசும் மக்களின் தமிழ்த் தேசியம் மரபுவழித் தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வைக் காணவும், யுத்த நிறுத்தம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டுமெனக் கோரியும் பல்கலைக்கழக சமூகத்தின் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது,**

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது:

பல்கலைக் கழக வளாகத்தைச் சுற்றியும், அதன் நுழைவாசல்கள் யாவும் இராணுவத்தினராலும், பொலிசாரினாலும் முற்றுகைக்குட்படுத்தப்பட்டிருந்தபோதும், பல்கலைக் கழக வளவினுள் பாடசாலை மாணவர்கள் படையினரின் பாதுகாப்பை

(8ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் செய்து பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண வேண்டும்

### எழுச்சி நிகழ்வில் துணைவேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரீதியாக பல்கலைக்கழகங்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசியல், சமூக, பொருளாதார விஞ்ஞானம் போன்ற துறைகளில் குரல் கொடுப்பதுவழக்கம்.

யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிசழ்வில் எழுச்சி தீபத்தை ஏற்றி வைத்து ஆசியுரை வழங்கிய யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது;

யாழ்.பல்கலைக் கழகம் இனப்பிரச்சினை என்ற போர்வையில் இடம் பெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானமான தீர்வை முன்னெடுக்க விரும்புகிறது, அதற்குரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக சமூகத்தின் பொங்கு தமிழ் பிரகடனம்

இந்தப்பொழுது திரண்டிருக்கும் எங்களின் ஆத்மாவின் குரலை ஒரே சுருதியில் வெளிப்படுத்துகின்றோம். அரசு இந்தக் கொடிய யுத்தத்தினை உடனே நிறுத்த வேண்டும். அர்த்தமும் நீதியுமான பேச்சுவார்த்தையினை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன் ஆரம்பிக்க வேண்டும். இதன் வழி தமிழ் மக்களின் நீண்டகால ஆத்ம வெளிப்பாட்டினை பெரு விருப்பினை அபிலாசை (8ஆம் பக்கம் பார்க்க)

### மகேஸ்வரன் பங்குபற்றினார்

யாழ்பல்கலைகழக சமூகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற பொங்குதமிழ் எழச்சி நிகழ்வில் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் கலந்து கொண்டார்:

பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிசாரின் மெய்ப் பாதுகாப்பின்றி அவர் சென்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## வவுனியா வளாகத்திலும் பொங்கு தமிழ் எழுச்சி

(வவுனியா)

வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்ச்சி நேற்று இரு இடங்களில் உணர்வு பூர்வமாகவும், எழுச்சி பூர்வமாகவும் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்திலும், பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியிலும் மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது:

வவுனியா வளாகத்தில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பேராசிரியர்எஸ். நந்தகுமார், நம்பைக்குளம் பங்குத்தந்தை ஜெபபால குறூஸ் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இந் நிகழ்வில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். (வ)

## உலகத் தமிழ் மாணவர் அமைப்பும் ஆதரவு

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வானது தமிழ்பேசும்எம் இனத்தின் விடிவிற்காகநடாத்தப்படுகிறது இவ்எழுச்சி நிகழ்வானது மாபெரும்மாற்றத்தினைஉருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு சுவிற்சலாந்தில் இயங்கிவரும் , உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாணவர் அமைப்புபொங்குதமிழ் எழுச்சிநிகழ்வினை ஆதரித்து அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் பொங்கு தமிழ் நிகழ்வினை நாம்முழுமையாக ஆதரிப்பதோடு வெளிநாடுகளில் வாழ்கின்ற அனைத்து சமூகத்திற்கும் தமிழ்மக்களது நியாயமான கோரிக்கையை வெளிப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வோம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-12,42,59)

### பொங்கு தமிழுக்கு ஆதரவாக கனடாவிலும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்பல்கலைக் கழகத்தின் ''பொங்குதமிழ்'' எழுச்கிக்கு ஆதரவூாகவும், இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு கோரியும், கனடாவிலுள்ள ஒற்றவா மற்றும் ராய்ரன் பல்கலைக்கழக தமிழ்மாணவர்கள் அமைதிப் போராட்டமொன்றை நடாத்தவுள்ளனர்.

கனேடிய வெளியுறவு அமைச்சர் யோன்மலினின் அலுவலகத்துக்கு முன்பாக இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 21 சடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மேலும் 21 சடலங்கள் கண்டெடுக்கபட்டு யாழ் வைத்திய சாலையில் நேற்று மாலை4 மணியளவில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இச்சடலங்களில்15 பெண்களுடையது எனவும் 6 ஆண்களு

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவை மீள கைப்பற்றும் கினிகிர-9 இராணுவ நடவடிக்கை

## 60 படையினர் பலி; 227 பேர் காயம்

(கொழும்பு)

ஆனையிறவுப் படைத் தளத்தைக் கைப்பற்றும் நோக்குடன் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட கினிகிர - 9 இராணுவ நடவடிக்கையின் போது இரண்டு நாள் சண்டையில் இரு அதிகாரிகள் உட்பட 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், ஒன்பது அதிகாரிகள் உட்பட 227 பேர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் சனத் கருணரத்தினா தெரிவித்துள்ளார்:

இச்சண்டையில் 52 விடுதலைப்புலிகள் மரணமடைந்துள்ளதாகவும் 72 பேர் காயமடைந்துள்ளதாகவும் மரணமடைந்த 52 பேரில் 35 சடலங்களை செஞ்சிலுவைச் சங்கமூலம்புலிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்:

இரண்டுநாள் சண்டையின் போது இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை ஹெலிக்கொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் பல்குழல் பீரங்கிப்படையணியும் யுத்தமுனையில் உதவி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன:

இந்தச் சண்டையின்போது காயமடைந்த இராணுவத்தினரை அம்புலன்ஸ் வண்டிகளும் இராணுவ வாகனங்களும் அடிக்கடி ஏற்றிக் கொண்டு வடமராட்சிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## இரு தலையுடன் பிறந்த அதிசயபெண் குழந்தை

### வவுனியா வைத்தியசாலையில் பிறந்தது

வவுனியா வைத்தியசாலையில் நேற்று இருதலையுடன் பிலந்த அதிசயப் பெண்குழந்தையொன்று பிறந்துள்ளது. யாழ்ப்பாணம் பெரியவிழானைச் சேர்ந்த பாக்கியநாதன் நாகேஸ்வரி (வயது 37) என்ற இளம் தாயே தனது முதலாவது பிரசவத்தில் இவ்வதிசயப் பெண்குழந்தையைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலமே இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயணஅனுமதிவழங்கப்பட்டோர்விபரம்

இம்மாதம் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக நீதியாகத்தரப்படுகின்றன.

### சாங்கனை

171516 ஏ

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 168228 ஏ | 168228 பி |
| 168228 சி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 170963 ஏ | 171211 ஏ |
| 171226 ஏ | 154012 ஏ |
| 161024 ஏ | 161025 ஏ |
| 168541 ஏ | 168775 ஏ |
| 168775 பி | 168805 பி |
| 170954 ஏ | 171764 ஏ |
| 171764 பி | 171764 சி |
| 171872 ஏ | 173763 ஏ |
| 173763 பி | 173763 சி |
| 173763 டி | 173812 ஏ |
| 175305 ஏ | 175305 பி |
| 175305 சி | 175309 ஏ |
| 175325 ஏ | 175354 ஏ |
| 175354 பி | 175362 ஏ |
| 175362 பி | 175362 சி |
| 175374 ஏ | 175374 பி |
| 175655 ஏ | 175655 பி |
| 175681 ஏ | 175687 ஏ |
| 175687 பி | 175687 சி |
| 178035 ஏ | 178035 பி |
| 178035 சி | 178058 ஏ |
| 178101 ஏ | 178101 பி |
| 178132 ஏ | 178159 ஏ |
| 178159 பி | 178159 சி |
| 178159 டி | 178159 ஈ |
| 178177 ஏ | 178190 ஏ |
| 178190 பி | 178190 சி |
| 178194 ஏ | 178194 பி |
| 178296 ஏ | 178197 ஏ |
| 178198 ஏ | 178198 பி |
| 178222 ஏ | 178228 ஏ |
| 178228 பி | 178228 சி |
| 178228 டி | 178228 ஈ |
| 178228 எவ் | 178228 ஜி |
| 178228 எச் | 178235 ஏ |
| 178235 பி | 178238 ஏ |
| 178245 ஏ | 178245 பி |
| 178245 சி | 178245 டி |
| 178245 ஈ | 178254 ஏ |
| 178254 பி | 178254 சி |
| 178254 டி | 178254 ஈ |
| 178254 எவ் | 178261 ஏ |
| 178261 பி | 178261 சி |
| 178264 ஏ | 178264 பி |
| 178264 சி | 178264 டி |
| 178283 ஏ | 178283 பி |
| 178299 ஏ | 178307 ஏ |
| 173307 பி | 178322 ஏ |
| 178322 பி | 178352 ஏ |
| 178356 ஏ | 178357 ஏ |
| 178357 பி | 178357 சி |
| 178376 ஏ | 178466 ஏ |
| 178506 ஏ | 178506 பி |
| 178506 சி | 178506 டி |
| 178805 ஏ | 179814 ஏ |
| 179819 ஏ | |
| 179823 ஏ | 179825 ஏ |
| 179825 பி | 179844 ஏ |
| 179852 ஏ | 179889 ஏ |
| 179889 பி | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 168618 ஏ | 178082 ஏ |
| 178178 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 128264 ஏ | 170441 ஏ |
| 170442 ஏ | 170496 ஏ |
| 170496 பி | 170496 சி |
| 170496 டி | 171250 ஏ |
| 173360 ஏ | 177037 ஏ |
| 177037 பி | 177037 சி |
| 177075 ஏ | 177079 ஏ |
| 177079 பி | 177218 ஏ |
| 177221 ஏ | 177221 பி |
| 177221 சி | 177259 ஏ |
| 177265 ஏ | |
| 177274 ஏ | 177274 பி |
| 177288 ஏ | 177288 பி |
| 177290 ஏ | 177298 ஏ |
| 177298 பி | 177305 ஏ |
| 177305 பி | 177313 ஏ |
| 178031 ஏ | |

### மருதங்கேணி

171277 ஏ

### நல்லூர்

| | |
|---|---|
| 170702 ஏ | 170704 ஏ |
| 170705 ஏ | 171201 ஏ |
| 171215 ஏ | 171228 ஏ |
| 171253 ஏ | 171254 ஏ |
| 171258 ஏ | 171278 ஏ |
| 171612 ஏ | 173967 ஏ |
| 173967 பி | 177064 ஏ |
| 177105 ஏ | 177109 ஏ |
| 177112 ஏ | 177112 பி |
| 177112 சி | 177112 டி |
| 177112 ஈ | 177112 எப் |
| 177112 ஜி | 177122 ஏ |
| 177122 பி | 177122 சி |
| 177122 டி | |
| 177122 ஈ | 177126 ஏ |
| 177127 ஏ | 177 31 ஏ |
| 177232 ஏ | 177269 ஏ |
| 148102 ஏ | 148102 பி |
| 163627 ஏ | 168581 ஏ |
| 168581 பி | 168581 சி |
| 168667 ஏ | 168667 பி |
| 168667 சி | 171758 ஏ |
| 177758 பி | 171833 ஏ |
| 173593 ஏ | 173593 பி |
| 175380 ஏ | 175470 ஏ |
| 175470 பி | 175515 ஏ |
| 175515 பி | 175515 சி |
| 175562 ஏ | 178021 ஏ |
| 178026 ஏ | |
| 178032 ஏ | 178032 பி |
| 178038 ஏ | 178120 ஏ |
| 178136 ஏ | 78136 பி |
| 178150 ஏ | 178150 பி |
| 178168 ஏ | 178168 பி |
| 178168 சி | 178205 ஏ |
| 178205 பி | 178206 ஏ |
| 178223 ஏ | 178223 பி |
| 178236 ஏ | 178262 ஏ |
| 178236 பி | |
| 178281 ஏ | 178281 பி |
| 178281 சி | 178282 ஏ |
| 178282 பி | 178282 சி |
| 178288 ஏ | 178288 பி |
| 178302 ஏ | 178313 ஏ |
| 178315 ஏ | 177337 ஏ |
| 178348 ஏ | 178418 ஏ |
| 178148 பி | |
| 178756 ஏ | 178756 பி |
| 178756 சி | 178756 டி |
| 179136 சி | 179824 ஏ |
| 179826 ஏ | 179851 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 171213 ஏ | 173934 ஏ |
| 173935 ஏ | 174014 ஏ |
| 174073 ஏ | 174073 பி |
| 177025 ஏ | 177041 ஏ |
| 177066 ஏ | 177087 ஏ |
| 177092 ஏ | 177092 பி |
| 177092 சி | 177092 டி |
| 177228 ஏ | 177257 ஏ |
| 177263 ஏ | 177291 ஏ |
| 177291 பி | 177291 சி |
| 177291 டி | 177308 ஏ |
| 179517 ஏ | 179517 பி |
| 179517 சி | |

### வேலணை

171218 ஏ


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம இலங்கை

## கேள்வி அறிவித்தல

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் வகுப்பறை புனரமைத்தலும், ஆண்கள் மலசல கூடம் அமைத்தலுக்குமான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்

கட்டிட நிர்மான வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் அல்லது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப்பத்திரங்கள் பெற தகுதியுடையவராவர்.

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 29-01-2001 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும், சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ. 500/-

மீளளிக்கப்படக்கூடிய வைப்புத்தொதை ரூ. 4500/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 08-02 2001 காலை 10-00 மணிக்கு முன் தலைவர், கேள்விச்சபை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு கிடைக்க கூடியதாக அனுப்பப்படவேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவல நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்விக்காரர்கள் பரிசீலிக்க முடியும்.

**தபால்பெட்டி இலக்கம். 57** **பதிவாளர்,**
திருநெல்வேலி, யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம். (கி-1338)


## நிர்வாகசபை தெரிவுக்கூட்டம்

(ஈச்சமோட்டை)

ஊரதீவு அறிவகம் சனசமூக நிலயத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகசபைத்தெரிவுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிராமசேவையாளர் செல்வி பிரேமினி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு ஊரதீவுவாழ் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-59)

## திருவுருவ சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஞானப் பிரகாசரின் 54 ஆண்டு நினைவு தினமான எதிர்வரும் 22 ஆம் திகதி அவரது திருருவுவச் சிலை ஒன்று மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் யாழ் ஆயர் வண பிதா தோமஸ் சவுந்தர நாயகம் அடிகளால் திறந்து வைக்கப் படவுள்ளது.

இதேவேளை அவரது திருவுருவச்சிலை அவரின் 125 பிறந்த தினத்தில் திறுவுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதும் நாட்டின் சூழ்நிலைகாரணமாகதிறந்து வைக்கப்படவில்லை என்பபதும் குறிப்பிடத்தக்கது. (உ-05)

## சிகிச்சை பெற செல்வோர் அதிகரிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை இலவச ஆயுர்வேத வைத்திய சாலையில் தினமும் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இங்கு சிகிச்சை பெற வருபவர்களில் பெரும்பாலானவர்கள் வாத நோய், சளிச்சுரம் தோல், நோய்கள் என்பவற்றால்பீடிக்கப்பட்டவராவார். (ச-120)

## வருமானவரி ஏய்த்த;லாலு 18 இலட்சம்ரூபா கட்டுவார்

(பட்னா)

பீஹார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாதஜ தவ் வருமான வரீ ஏய்ப்புக் கொடுத்ததற்காக இந்திய வருமான வரித்துறையினர்க்கு மேலும் பதினெட்டு இலட்சம் கட்டும்படி கட்டளை பிறப்பித்துள்ளது

லாலுவுக்கு, முன்னதாக ஒருகோடியே பத்தொன்பது இலட்சம் கட்டும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

லாலு பிரசாத் ஏற்கனவே 91, 92, 96, 97, ஆம் ஆண்டுகளுக்கான வருமானத்தை மறைத்திருந்தார் என்றும அளவுக்குமிஞ்சிய வருமானத்தை காட்டத்தவறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அரியாலைப் பகுதியில் நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மோதல் இடம் பெற்ற அரியாலைப் பகுதியில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக மக்கள் ஜனநாயகப் பேரவை யாழ்: மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

குகன் வீதி அரியாலை என்ற இடத்தைச்சேர்ந்தநாகமுத்து சுப்பிரமணியம் என்பவரது உடைந்து தரைமட்டமாகிய வீட்டு வளாகத்தில் இருந்தே மேற்படி நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இடப் பெயர்வுக்கு முன்னர் வீட்டு உரிமையாளர் பத்திரமாகப் புதைத்துவைத்துவிட்டு சென்ற 35 பவுண் நகைகளே இவ்வாறு மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மக்கள்ஜனநாயகப்பேரவை யாழ் மாவட்டஅமைப்பாளர் மற்றும் 6 வது சீ.எல் ஐ. படைப் பிரிவின் 2 வது கட்டளைத் தளபதி மேஜர் அத்துல ஆகியோரின் முன்னிலையில் நகைகள் உரிமையாளரால் மீட்கப்பட்டன. (உ-12)

## சந்நிதியானில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகள் வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகும் நிகழ்வில், சிவ சண்முகவடிவேலின் வன்றொண்டர் வாக்கு வாதம், என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறும். (ச)

## ஆத்மீகநூல் தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சாயிபாபா களஞ்சியநூல் நிலையத்தின் ஆத்மீக நூல் தினம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள சாயிபாபா களஞ்சியத்தில் நடைபெறவுள்ளது.

அன்பர்கள் அனைவரையும் மேற்படி நிலையத்தினர் அழைக்கின்றனர். (ச)

## பரீட்சை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்க்கான கலைமாணி பகுதி 1 பொருளியல் 2:2 இற்கான, நேற்றைய தினம் இடம் பெறவிருந்த பரீட்சைகள் வரும் மாசி மாதம் முதலாம் திகதிக்கு பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-83)

## கண்ணீர் அஞ்சலி

மறைவு: 17 - 01 - 2001

அமரர்

சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

[பாலண்ணை]

கலைமணி ச சமூக நிலைய முன்னாள் செயலாளரும், தற்போதைய போசகரும், இன்னாள் தலைவரின், தந்தையுமாகிய

**அமரர் ச. பாலசிங்கம் அவர்கள்**

காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கலைமணி ச. சமூக நிலையம்**
**கலைமணி விளையாட்டுக்கழகம்**
கட்டப்பிராய்

(2430)

## பிரிவுத்துயர் பகிர்வு

காசிப்பிள்ளை நல்லதம்பி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நல்லதம்பி 16 ஆம் திகதி காலமானார்

தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்

**வி. தனலட்சுமி** (சகோதரி)

---

வி.எம். செல்லத்துரை

அராலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட வி. மாணிக்கம் செல்லத்துரை 13-01-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

தகவல்

**செ. தங்கராசா** (மகன்)

### பாணின் விலை, தரம், நிறை

# மக்களைப் பாதிக்காத வகையில் இறுக்கமான கட்டுப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டுப் பாணின் விற்பனை விலை, தரம், நிறை ஆகியன பச்களுக்கு தீங்கு விளைவிக்காத முறையில் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க சந்தித்து பேச்சு நடத்தியபோது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாணின் விலை ரூபா 10.50 ஆகவும் அதன் நிறை 450கிராமாகவும் இருக்கும் பட்சத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யும் சட்டுப்பாட்டு விலையில் பேக்கரி உரிமையாளருக்கு மாவினையும் சீனியையும் விற்பனை செய்யவும் இச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேசமயம், கட்டுப்பாட்டு விலையில் பார்க்க குறைந்த விலையில் மாவினை வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்வதாகவும் அமைச்சரினால் உறுதி தெரிவிக்கப்பட்டது. (உ)

### அலுவலகப் பணியாளர் பதவி

## அலுவலக சேவகர் என மாற்றியமைக்குக

### வடக்கு கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அலுவலகப் பணியாளர் பதவியை அலுவலக சேவகர் என மாற்றியமைக்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கம் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

இதுதொடர்பாக அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன், செயலாளர் கே.நடராஜா ஆகியோர் கூட்டாக ஒப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்

சிங்கள மொழியில் சாரி66 மாலய சாரியசஹாயர்'' என்பது தமிழில் அலுவலக சேவகர் என்று தெளிவாக பொது நிருவாகஅமைச்சின் சுற்றறிக்கையிலும் வர்த்தமானி அறிவித்தல் மூலமாகவும் குழுப்பு 2 இற்குரிய பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது

இதன் அடிப்படையில், வடக்கு கிழக்கு மாகாண பொது நிருவாக அமைச்சும் சுற்றறிக்கை மூலமாக ஊழியர்களிடமிருந்து அவர்களின் சுயவிருப்பத்தையும் கோரியிருந்தது.

இதற்கு முரணாக தற்பொழுது அலுவலகப்பணியாளர் என்று பதவிப்பெயர் குறிப்பிட்டு வழங்கும் மர்மம் என்ன?

திட்டமிட்டு ஊழியர்களை தொடர்ந்து வகுப்பு 3தரத்திலேயே வைத்து கடமை வாங்க வேண்டும் என்பதே சம்பந்தப்பட்ட அமைச்சின் செயற்பாடாக இருந்து கொண்டிருக்கிறது எனவும் மிகவும் சடுமையான முறையில் அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

### நேர்முகத் தேர்வு அழைப்புக்கடிதம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் இருந்து அழைக்கப்பட்ட 20 பேருக்குமான அழைப்புக்கடிதங்களை பேராசிரியர் க. பவானி கொழும்பில் இருந்து எடுத்து வந்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை பொற்பதி றோட் கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள பேராசிரியர் க. பவானியின் இல்லத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தமது அழைப்புக் கடிதங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உ-4)

## இராசி பலன்

18-1-2001

(தை 5, வியாழன்)

நவமி மு.ப 11 39 வரை

சுவாதி காலை 7 27 வரை

ராகுகாலம் 2.05- 3 35

சுபநேரம் 8 05- 9.35

அமிர்த சித்தம்.

**மேடம்**
வாகன வசதி, சௌரவம், தனவரவு, நல்ல உணவு கிடைத்தல்.

**இடபம்**
சுகவாழ்வு, பொருள் சேர்க்கை, பகைவர் விலகுவர், காரிய ஜெயம்.

**மிதுனம்**
குடும்பக் கவலை, நினைத்த காரியம் இடையூறு, தாழ்வு நிலை, வியாதி.

**கடகம்**
விரோதம், தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், தாய் வழி உறவு.

**சிங்கம்**
முயற்சிபலிதம், தனவரவு, பிரயாணம், குடும்ப சுகம்.

**கன்னி**
வாக்கு கலகம், தனவிரயம், முயற்சி தாமதம், கோபப்படுதல்.

**துலாம்**
நிலைக்கேடு, தேகசுகம், ஆழ்ந்த சிந்தை, சயனசுகம்.

**விருச்சிகம்**
பிரயாணம், காரிய தாமதம், கர்வப்படுதல், சயன சுகக் குறை.

**தனுசு**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தனலாபம், சினேகிதர் தொடர்பு, மனமகிழ்ச்சி.

**மகரம்**
தொழில் சிறப்பு, முயற்சி கைகூடும், சூடு சம்பந்தமான ரோகம், அதிகாரம்.

**கும்பம்
**பிரயாணம், காரிய தாமதம், மனப்பயம், கட்டுப்பாடு.

**மீனம்**
தெய்வ வழிபாடு, உறவினர் வருகை, சென்ற இடம்சிறப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது.)

வளவன்

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.வை.எம்.சி.ஏ யின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலை ஆண், பெண் பிரிவுகளுக்கிடையே கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில்,

இன்றைய தினம் கொக்குவில் இந்துக்கல்லூரி பெண்கள் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பெண்கள் அணியும்

சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 'ஏ' அணியும் மோதவுள்ளன. (உ)

## ஊரதீவில் மாதர்சங்கம் உதயம்

(ஈச்சமோட்டை)

புங்குடுதீவு ஊரதீவில் புதிதாக மாதர்சங்கமொன்று உருவாகியுள்ளது.

இப்பகுதி பெண்களினை ஒன்றிணைத்து அவர்களின் திறன்களை வளர்க்கவும், அதன்மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமாக இவ் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இம் மாதர் சங்கத்தின்மூலம் மாணவர்களுக்கான பின்னூட்டல் வகுப்புகள் நடத்துவதற்கும், தையல்பயிற்சி மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டலை வழங்குவது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (ச-59)

### காக்கைதீவில்

## கட்டடம் திறப்புவிழா

(மானிப்பாய்)

காக்கைதீவில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட சனசமூக நிலைய புதிய சட்டடம் கடந்த 15 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் க.சந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழா வைபவத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். பாலசிங்கம் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ச-120)

## விகிதாசார முறைப்படி தேர்தல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படியே நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்தலை விகிதாசார முறைப்படி நடத்துவதா அன்றி பழைய முறையில் நடத்துவதா என ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்கும் படி நியமிக்கப்பட்ட குழுவே மேற்கண்ட முடிவினை வெளியிட்டுள்ளது. (உ-தி)

பொங்கல் கவிதைப் போட்டியில்
பாராட்டுப்பெறும் கவிதைகள்
பிரசுரமாகின்றன



## தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

ஓடையிலே தேன்நதிகள் ஒன்றாகிப் பாயும்
மேடையிலே தேன்மொழிகள் இரண்டாகிப் பாயும்
நாளையிலே தமிழ்ப் பொங்கல் நான்றாகப் பொங்கும்
வேளையிலே யுத்தநிறுத்தம் ஒன்றாகிப் பொங்கும்
காலையிலே நகைசிந்தும் கதிரவன் ஒளிபோல
சோலையிலே குயில்பாட தமிழும் பொங்கும்
தைமகளே தமிழர்க்கு விடிவுதனை தாராயோ-என்று
தமிழ்மகளைக் கவிதையால் தாலாட்டுப் பாடுவோம்.

**க. நளாயினி**
யாழ்ப்பாணம்

★ ★ ★

தை மகளே வருக
தாய் மகளே வருக

பொய் முகங்கள் உதிர்த்து
பொய் உரைகள் விதைத்து

செய் காரியம் சிறுத்து
ஷெல் மழை பொழிந்து

வல்ல இனப் போர், மறைந்து
நல்லிணக்கம் நீயே தருக

**கதிரவேற்பிள்ளை அருந்தவராஜ்**

★ ★ ★

ஐம்பதின் பின்னே வந்தன பல தைகள்
ஐயமின்றிக் கூறிடுவேன்அவையெல்லாம்துன்பத் தைகள்
பொங்கினோம் பொங்கல் படைத்திட்டோம் உவகை
-யுடன்
பொங்கி வழிந்தது பாலல்ல, கண்ணீர்!

பானையில் பால் பொங்கி, வடிவது வேறு,
புகைபட்டுக் கண்ணீர் வழிந்தது வேறு, -உடலைத்
தைக்கும் குண்டால் இன்று வழியுது கண்ணீர் -இரண்
-டாயிரத்தொன்றின்
தை மகளே, தமிழர்க்கு விடிவுதனைத். தாராயோ!

**யசிந்தா இராமச்சந்திரன்,
யாழ்ப்பாணம்.**

★ ★ ★

தமிழன்னை மடிதனில் பிறந்தது தமிழினம்
விசமிகள் கைகளால் சாகுது ஏன்தினம்?
தமிழனின் உயிர் மூச்சு போகுது உயர்ந்து
அன்னியன் மனங்களோ தூங்குது அயர்ந்து
கைகளில் எட்டுது வானத்து மேகங்கள்
அடிமைகள் மனந்தனில் சுதந்திரத் தாகங்கள்
ஆறாத துயர்தனை துடைத்திட வாராயோ? -எம்
தை மகளே தமிழர்க்கு விடிவினை தாராயோ?

**இராமச்சந்திரன் விஜயரூபன்,
அல்வாய்.**

★ ★ ★

கீழ்வானம் சிவக்குமென்று, தமிழர் நாம் பார்த்துப்
-பார்த்துப்
பாழானது எம் வாழ்வு; பலிகளே தொடருதிங்கு
கால் வலிக்கக் கை விறைக்க; அலைகிறோம் சுமை
-களோடு
தோலுரித்துச், செருப்புத் தைக்கும் எண்ணமே, வளரு
-தங்கு
''குரங்கின் கைப் பூமாலை போற்'' சிதைகிறது எமது
-நாடு
அரங்கமைத்தாடுது பேரினப்பேய் குருதி குடிக்கும் வெறி
-யோடு
மெய்தானே! நீ பிறந்தால் வழி பிறக்கும் என்பதெல்
-லாம்
தை மகளே, தமிழருக்கு விடிவுதனைத் தாராயோ!

**சுந்தரம் சுந்தரலிங்கம்
கரவெட்டி**

★ ★ ★

அகதிகளாய் வாழுகின்ற நிலைமை மாறி
அவலங்கள் துயரங்கள் யாவும் நீங்கி -வரும்
யுகமெல்லாம் அமைதியெனும் தென்றல் வீசி
யுத்தத்தின் கொடுமைகள் யாவும் ஒழிந்து
அகங் குளிர அனைவரையும் அரவணைத்து
அகிலமெங்கும் தமிழோசை ஒலிக்கக் கேட்டு
தகைமையுள்ள தீர்வதனைப் பெற்று வாழ
தை மகளே! தமிழருக்கு விடிவுதனைத் தாராயோ!

**முருகேசு முத்துக்குமார்
மானிப்பாய்.**

★ ★ ★

விலங்கிட்ட உணர்வுகளோடு நிதம் விடியலைநோக்கி,
முஹாரியையே முகந்வாக்கி முடிந்து போன வருடங்கள்!
கானல் பொழுதுகளோடு கரைந்து போகும் கனவுகள்!
கண்ணிமைக்கும் நேரத்தில் காணாமல்போன உறவுகள்:
பூமித் தாய் மடியினில் புதையுண்டு ஆழத்தில்!
முடிச்சு மாறிகளாய் முனகும் அரசியல்கள்-தமிழர்க்கு
சோகங்கள் தான் சொந்தமா? -தை மகளே!
நீயாவது தமிழருக்கு விடிவுதனைத் தாராயோ!

**லக்ஷிகா ஸ்ரீஸ்காந்தராஜா,
கோப்பாய்.**

# செய்தித் துளிகள்

## பழைய பாடசாலைகளில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய வலிகாமம் கல்விவலய ஆசிரிய மாணவர்களை மீளவும் முன்பு கற்பித்த பாடசாலைகளில் இணைக்கும் வகையிலான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்களன்று மேற்படி வலய பணிமனையில் இடம்பெற்றது.

வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இருதயநாதன், பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் உறுதுணையாய் நிற்கவேண்டும் என ஆசிகூறி நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தார். (உ)

## நிறைகுறைந்த குழந்தைகள்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு பிறந்த ஆயிரத்து 677 குழந்தைகளுள் 656 குழந்தைகள் நிறைகுறைந்து பிறந்திருப்பதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அரசின் பொருளாதார தடை, மற்றும் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட இடப்பெயர்வு, கர்ப்பிணித் தாய்மார்க்கு போஷாக்கின்மை, மற்றும் தொற்றுநோய்கள் காரணமாகவே குழந்தைகள் நிறைகுறைந்து பிறக்கும் வீதம் அதிகரித்திருப்பதாகவும் அப் புள்ளி விபரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (உ-5)

## முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இந்திய இலங்கை கடற்படையினருக்கிடையே மேலும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் அடுத்த மாதமளவில் உயர் மட்டச் சந்திப்புக்கள் இடம்பெறவிருக்கின்றன.

அடுத்த மாதத்தின் மூன்றாம் வாரத்தில் மும்பை நகரில் நடைபெறவிருக்கும் பாரிய கப்பல் கண்காட்சி நிகழ்விலும், 'சர்வதேச அணிநோக்கு 2001' என்ற நிகழ்விலும் கலந்துகொள்ளும் வகையில் செல்லும், இலங்கையின் புதிய கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரி தலைமையிலான குழுவினரே இச்சந்திப்புக்களை நடத்தவுள்ளனர். (உ)

## திருடர் தொல்லை

(கோப்பாய்)

கோப்பாய்- பருத்தித்துறை வீதியின் கிழக்கே நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இப்பிரதேசங்களை விட்டகன்ற பின்னர், இப்பகுதிகளில் அமைந்திருக்கும் வீடுகளில் திருடர் தொல்லை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்படி வீடுகளில் எஞ்சியிருந்த கதவுகள், கொங்கிறீட் கற்கள் மற்றும் தேங்காய்கள் என்பனவற்றை திருடிச்செல்வது மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. (உ-79)

## மின்வெட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் கிழக்கு பகுதியில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதாக பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-25)

## மீன் வியாபாரத்தில் மோசடி

(கல்வியங்காடு)

கல்வியங்காட்டு சந்தையில் பாவனைக்குதவாத மீனை, மக்களை ஏமாற்றி விற்றுவந்தவர் இனம்காணப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பழுதடைந்த மீன்களை விற்பவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், பாவனைக்குதவாத மீன்கள் வெட்டிப் புதைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-54)

## முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கல்

(மல்லாகம்)

வலிதெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பகுதியிலுள்ள முன்பள்ளிகளுக்கு, இவ் வருடம் பாடசாலைக்குச் சென்றவர்களைத் தவிர்த்து, புதிதாக இணைந்துள்ளவர்களதும் எண்ணிக்கைக்கு ஏற்ப தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாக இப்பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார். (ச-ப-14)

## புகையிலை கன்றுகளில் குருமன் நோய்

(இணுவில்)

வலிகாமம் தெற்கில் இணுவில், உடுவில் சுன்னாகம், குப்பிளான்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட புகையிலைக் கன்றுகள் பெரும்பாலானவற்றின் இலைகளில், குருமன் நோய்த்தாக்கம் காணப்படுகிறது.

இதற்கான பூச்சித்தாக்கத்தினை தடுக்கும் வகையில், புகையிலைச் செய்கையாளர்கள் தமது தோட்ட நிலங்களில் செவ்வந்திக் கன்றுகளை வளர்த்து வருவதனை அவதானிக்க முடிகிறது. (உ-49)

## நூல்கள் அன்பளிப்பு

(மல்லாகம்)

ஏழாலை பொது நூல்நிலையத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு நாளை 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வலிதெற்கு பிரதேசசபை தலைவர் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில், பல பெறுமதிமிக்க ஆங்கில மற்றும் தமிழ் நூல்களை, ஏழாலை மேற்கைச்சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் த. அப்பலிங்கம் வலிதெற்கு பிரதேசசபை உப அலுவலகம் ஊடாக அன்பளிப்புச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ப-14)

## தியாகராஜ சுவாமிகள் ஆராதனை

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்த நுண்கலை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தியாகராஜ சுவாமிகள் ஆராதனை நடைபெறவுள்ளது

இந் நிகழ்வில், சங்கீத பூஷணம் பொன். ஸ்ரீ வாமதேவன் தியாகராஜ சுவாமிகளின் கிருதிகளைப்பாடி இசைவிருந்தளிப்பார். (உ)

# வடமராட்சி மக்களின் பயண அனுமதியை பருத்தித்துறையில் வழங்குக

## வலியுறுத்தி அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மக்களுக்கு பருத்தித்துறையில் பயணச்சீட்டு வழங்கும்பணி நிறுத்தப்பட்டு யாழ்ப்பாணத்திலேயே அவர்களுக்கு பயணச்சீட்டு வழங்கப்படுகிறது.

இச் செயலானது மக்களது வசதிகளைப் படிப்படியாக அதிகரிப்பதற்குப் பதிலாக- இயல்பு நிலையினை உருவாக்குவதற்குப் பதிலாக அவர்களது கஷ்டங்களை மேலும் அதிகரிக்கும் செயலாகவே வடமராட்சி மக்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு, வடமராட்சி அரிமாக் கழகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமராட்சி மக்கள், முன்பு போல பருத்தித்துறையிலேயே பயணச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படவேண்டும் என கோரி அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள மேற்படி மகஜரில்,

வடமராட்சி மக்கள் பயணச்சீட்டுப்பெற யாழ்ப்பாணம் செல்வதால் ஏற்படும் பணவிரயம், காலவிரயம், வயோதிபர்கள், நோயாளிகள் படும் சிரமம் என்பன குறித்தும்,

பயணத்தன்று அதிகாலை யாழ்ப்பாணத்தில் சமூகம் கொடுக்கவேண்டி இருப்பதால் எதிர்கொள்ளும் இடைஞ்சல்கள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி நடைமுறையானது இதுவரை வசதியாக பயணத்தை மேற்கொண்ட வடமராட்சி மக்களுக்கு வலிந்து சிரமங்களை கொடுக்கும் செயலெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி மகஜரின் பிரதிகள் யாழ் அரச அதிபர், மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர், பருத்தித்துறை இராணுவமுகாம் கட்டளை அதிகாரி ஆகியோர்க்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-23)

## மாணவிகள் பயணிக்கும் பேருந்தினை தொடரும் ஆடவர் முயற்சி முறியடிப்பு

(ஆவரங்கால்)

பெண்களுக்கான பாடசாலை சேவை பேருந்தின் பின்னால் நாயாய் அலைந்த இளைஞர் சிலரின் வெட்டித்தனம், சாரதியின் கெட்டித்தனத்தால் முறியடிக்கப்பட்டது.

அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே சேவையில் ஈடுபடும் பெண்களுக்கான பாடசாலை சேவை பேருந்தினை பிற்பகல் வேளையில் வழக்கமாக இளைஞர் சிலர் மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்தனர்.

இதுகுறித்து ஆராய்ந்த போது பேருந்தினுள்ளே பின்பக்கமாக நிற்கும் உயர்தர வகுப்பு மாணவிகளுக்குஇளைஞர்களின்பின்தொடர்தல்நடவடிக்கையில் உடன்பாடு இருப்பது தெரியவந்ததுடன்,

அவர்களது சைகைப் பரிமாற்றத்தையும் கண்டுணர முடிந்தது.

இதனையடுத்து, பின்பக்கத்தில் நிற்கும் மாணவிகளை முன்பக்கத்தில் அமருமாறு சாரதி கண்ணியமாக பணித்தார்.

இதனால் தமது செயற்பாடு மற்றவர்க்கும் தெரிந்துவிட்டதென சம்பந்தப்பட்ட மாணவிகள் வருந்தி மனம்திருந்த வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் இளைஞர்களின் பின்தொடர்தல் நடவடிக்கையும் முறியடிக்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது. (உ-57)

## நூலகங்களில் நாசவேலை புரியும் சினிமாப் பித்தர்கள்

(மல்லாகம்)

சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களில் நூல்கள் மற்றும் பத்திரிகைகளை நாசப்படுத்தும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகிறது.

கொழும்பில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் காணப்படும் பலவர்ண சினிமாப் படங்களை வெட்டி எடுத்துச் சென்றுவிடும் சினிமாப் பித்தர்களினால், அறிவுத் தேடலுக்காய் வருவோர் ஏமாற்றம் கொள்ளவேண்டி இருக்கிறது.

மேற்படி நாச வேலையை தடுக்கும் நோக்கில், ஒரு சிலரைக் கண்டால் புத்தகங்கள் சஞ்சிகைகள் பத்திரிகைகள், என்பவற்றை எடுத்து மறைக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாய் அப்பகுதி நூலகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-ப-14)

## பொங்கலை ஒட்டி விளையாட்டு

[ஈச்சமோட்டை]

பொங்கல் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மனித முன்னேற்ற நடுநிலைய விழிப்புக்குழுவினரால் ஊரதீவில் பொங்கல் விழாவும் விளையாட்டுப் போட்டியும் சிறப்பாக நடத்தப்பட்டது.

இதில்விழிப்புக்குழுஇணைப்பாளர் ஜோசப்பால மற்றும் ஊக்குவிப்பாளர் கியோமர் ஆகியோர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினர். (உ-59)

## கசிப்பு மயக்கம் காரிகையுடன் கலாட்டா சுன்னாகத்தில் சம்பவம்

(மல்லாகம்)

கசிப்பு மயக்கத்தில் வந்தவர் பெண் பிள்ளையுடன் கலாட்டா புரிந்த சம்பவம் அண்மையில் சுன்னாகம் பஸ் நிலையமருகே இடம்பெற்றுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

கசிப்பு மிக அருந்திய நபர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி நடு வீதியால் வந்து அவ்வழியே துவிச்சக்கரவண்டியில் சென்ற பெண்பிள்ளையுடன் மோதுண்டு நிலத்தில் வீழ்ந்து பழியை பெண்மீதே சுமத்தவும் முற்பட்டார்.

அத்துடன், இச் சம்பவத்தில் அப் பெண்ணின் சட்டையையும் இவர் கிழித்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இவற்றைக் கண்ணுற்ற அயல் வர்த்தகர்கள் மேற்படி போதையில் இருந்த நபரை ஒருவாறு அப்புறப்படுத்தினராம். (உ-ப-14)

## அச்சுவேலி தெற்கு பகுதிக்கு நன்னீர் விநியோகிக்க நீர்த்தாங்கிகள் அமைப்பு

(அச்சுவேலி)

பொது மக்களுக்கான நன்னீர் வழங்கும் திட்டத்திற்கமைவாக அச்சுவேலி தெற்குப் பகுதியில் நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் ஊடாக அமைக்கப்பட்டு வரும் இந் நீர்த்தாங்கிகளுக்கு அச்சுவேலி மேற்குப் பகுதியிலிருந்து குழாய் இணைப்புகளூடாக நீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

நீர்க் குழாய் இணைப்பு வேலைகள் தற்சமயம் பூர்த்தியடையாது இருப்பதால் தாங்கிகளுக்கு கொள்கலன்களிலிருந்து நீர் எடுத்து வந்து நிரப்புப்படவுள்ளது.

மேலும் இந் நன்னீர் திட்டத்தினூடாக அச்சுவேலி தெற்கு பகுதியில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பெருநன்மை அடையவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-14)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் அருள்மிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னோடிப் பூஜை வழிபாடுகள் 25 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாவதுடன் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறும்.

9 அடி உயரமான மேற்படி ஆஞ்சநேயர் விக்கிரகம் இந்தியாவில் இருந்து கடந்த 16 ஆம் திகதி பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டது. (உ)

யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# மனச் சோர்வுக்கு மருந்து

வரவர என் மேலே எனக்கு நம்பிக்கை இல்லை ஐயா என்று ஒருவர் சொன்னார் அவர் வேதாந்தியாக ஆகிவிட்டார் போல் இருக்கிறது என்று நாம் நினைக்கக் கூடாது அவருக்குத் தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்திருக்கிறதென்று அர்த்தம். அது மிகவும் ஆபத்தானது. அதை அப்படியே விட்டு விடாது உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டும். பலருக்கு மனம் ஒய்ந்து அலுப்பாகவும் அயர்வாகவும், எதிலும்கலந்து கொள்ள உற்சாகம் இல்லாமல் மனச் சோர்வு வந்து விடுகிறது

மனச் சோர்வு தீர்வதற்கு எந்தக்கடையில் மருந்து வாங்கலாம் என்று எண்ணிக் கடையில் போய்க் கேட்டால், கடையிலிருப்பவர் உங்களிடமிருந்தால் எனக்கு கொஞ்சம் தாருங்க என்று தான் சொல்வார். மருந்துக் கடையில் இல்லை; நம்மிடமே இருக்கிறது. முயற்சி செய்தல் முடியக் கூடிய காரியந்தான் இது.

நல்ல துணி மணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். முடிந்த அளவு நன்றாக உடுக்க வேண்டும். நிறைய விஷயங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும், புதிய விடயங்களைத் தெரிந்து கொள்ள முயலுங்கள். உங்களை யாராவது அலட்சியமாக நினைக்கிறது போலத் தெரிந்தால் அவர் பக்கம் கூட வைத்துக் கூட படுக்க வேண்டாம். அவர்களையெல்லாம் இரக்கம் காட்டாது உதறித் தள்ளுங்கள். அலட்சியப் படுத்துங்கள். அதன் பின்னர் நீங்கள் தான் இராஜா.

உங்களுக்குப் பிடிக்காததை ஒதுக்கித்தள்ளுங்கள். உடல் எடையைக்குறைக்கவா? குடிப் பழக்கத்தை நிறுத்தவா? எதையும் உடனடியாகச் செய்யுங்கள். ஒத்திப் போட வேண்டாம். நிவர்த்தி செய்ய முடியாத குறைகள் உங்களிடம் இருந்தால், அப்படிப்பட்ட குறைகளோடு வாழ்க்கையில் முன்னுக்கு வந்தவர்களின் சாதனையை நினைத்துப் பார்த்து உங்களை உற்சாகப் படுத்துங்கள். உங்களுக்கு என்று ஒரு தனித்தன்மை, சிறப்பு இருக்கும். அதனைக் கண்டு பிடித்துவெளிப்படுத்த வேண்டும். எப்போதாவது மனச் சோர்வு ஏற்பட்டால், உங்கள் தனித் தன்மையில் மனதைச் செலுத்துங்கள், சரியாய் விடும்.

உங்களைச் சுற்றியுள்ளவர்கள் எல்லாம் தன்னம்பிக்கையுடையவர்கள் என்றுஎண்ண வேண்டாம். அவர்கள் வெளியிலே நடித்துக் கொண்டிருப்பார்கள். உள்ளே உதறல் தான் அடக்கமாக இருக்கிறேன் என்று வீட்டில் அடைபட்டுக் கிடக்காதீர்கள். வெளியில் வாருங்கள். தன்னம்பிக்கையோடு இருக்கிறோம் என்று காட்டுவதற்காகக் கொஞ்சம் நடிக்கிறதும் தப்பு இல்லை. அச்சம் தேவை தான். ஆனால் அதைவெளிக் காட்டக் கூடாது.

சாதாரண அற்பவிடயமாக இருந்தால் கூட, எடுத்த காரியத்தைச்சிறப்பாகமுடிக்க வேண்டும் அது மன நிறைவைக் கொடுக்கும், மனச் சோர்வு நீங்குவதற்கு ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வைத்த வழி முறைகள் இவையாகும்.

**தென்கச்சிகோ. சுவாமிநாதன்**

## யுத்தத்தின் மத்தியிலும்

# வறுமைக் குறைப்பு தலா வருமானம் கல்வியில் இலங்கை முன்னணியில்

## உலகவங்கிப் பொறுப்பாளர் வியப்பு

(கொழும்பு)

தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளோடு ஒப்பிடுமிடத்து, வறுமைக்குறைப்பு, கல்வியறிவு, தலா வருமானம் போன்றவற்றில் இலங்கை முன்னணியில் உள்ளதென உலக வங்கியின் பொறுப்பாளர் சாதிக் அஹ்மட் தெரிவித்துள்ளார்.

கடந்த 17 வருடங்களுக்கும் மேலாக உள்நாட்டில் இடம் பெறும் யுத்தத்துக்கு மத்தியிலும் இவற்றின் வளர்ச்சி கண்டு தனது வியப்பை வெளியிட்ட உலகவங்கியின் பொறுப்பாளர்,

உலகில் உள்ள வறியமக்களில் 40 வீதமான 450 மில்லியன் மக்கள் தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்கின்றனர்.

இவர்களுள் இந்தியாவிலேயே அதிக வறிய மக்கள் வாழ்கின்றனர்.

ஆனால் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை பொறுத்த வரை இலங்கை முன்னேற்றகரமாக உள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் சசிக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் இ. சசிகுமார், உபதலைவர் லோ. செல்வச்சந்திரன், செயலாளர் சி. சிவச்செல்வன் உபசெயலாளர் ப. குகதாசன், பொருளாளர் பொ. கிருபானந்தன்.

இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-120)

## உயர், அதிகாரிகளில் அதிருப்தி குற்றப்புலனாய்வு கலைப்பு

குற்றப் புலனாய்வு பிரிவில் கடமையாற்றும் உயரதிகாரிகளில் சிலரின் செயற்பாடுகளில் அரசு அதிருப்தி அடைந்தமையே, குற்றப்புலனாய்வுப் பிரிவு கலைக்கப்பட்டமைக்குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்காவின் குற்றப்புலனாய்வுப் பிரிவு கலைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

கடந்த 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு, அன்றிலிருந்து குற்றச் செயல்கள் தொடர்பான பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு பேருதவியாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. [உ]

## புதியகட்டடம் திறப்பு விழா

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

யு. என். எச். சி ஆர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டடத்தினை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் திறந்துவைத்துள்ளார்.

திறப்பு விழா வைபவத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். பாலசிங்கம், அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-120)

## தெல்லிப்பழையில் இயங்கும் மனநோய் சிகிச்சைபிரிவில் இட நெருக்கடியாம்

(சுன்னாகம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வரும் மனநோய் சிகிச்சைப் பிரிவில் பெரும் இடப்பற்றாக் குறை நிலவுவதாக தெரியவந்துள்ளது.

தங்கிச் சிகிச்சை பெறுபவர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற போதிலும் அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதி விஸ்தரிக்கப்படாமையே இதற்குக் காரணமாக அமைகிறது.

இதேவேளை, இடப்பற்றாக்குறையால் மேற்படி நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பது மற்றும் பராமரிப்பதிலும் ஊழியர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர் நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-25)

## துனியார் சிற்றூர்தி கட்டணம் மாற்றமில்லை சிற்றூர்தி சங்கம்அறிவிப்பு

(அச்சுவேலி)

தனியார் சிற்றூர்தி சேவைக்கான கட்டணத்தில் எதுவித மாற்றமும் இல்லையென அச்சுவேலி சிற்றூர்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டீசல் விலை உயர்வடைந்ததையடுத்து பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும, மக்களின் நலனை மாத்திரம் கருத்திற் கொண்டு அச்சுவேலி சிற்றூர்திச் சங்கத்தினர் மேற்படி முடிவினை அறிவித்துள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி தனியார் சிற்றூர்திகளும் கட்டண அதிகரிப்பின்றி பழைய நடைமுறையின்படி சேவை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (உ-14)

## வீதி திருத்த முடிவு

(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார்கோவில் வீதி திருத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் மத்தி சமுர்த்தி உத்தியோகத்தர் செயலணிக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-25)

## சனசமூக நிலையத்தின் அறிவிப்புப் பலகையில் அவதூறு வார்த்தை

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி குருசோ வீதியில் அமைந்துள்ள ''கிறீன் பீல்ட்'' சனசமூக நிலையத்தில் நாசவேலை புரிபவர்களின் கைமேலாங்கி இருப்பதாக நிலைய நிர்வாகிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலையத்தின் சுவருடன் நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையில் தேவையற்ற விடயங்களை எழுதிச் செல்வதை விஷமிகள் சிலர்வழக்கமாக கொண்டுள்ளனர்.

நிலைய அங்கத்தவர்கள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றிய அவதூறான வார்த்தைகளை அறிவிப்புப் பலகையில் எழுதுவதுடன்,

அவர்களிடையே கருத்து முரண்பாடுகளை உருவாக்கி ஒருவரோடொருவர் மோதுப்படும் அளவுக்கு தேவையற்ற தகவல்களை இதில் எழுதிவிட்டுச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

இரவுவேளைகளில் கள்ளத்தனமாக இவ்வாறு விஷமம் புரிபவர்கள் குறித்து தாம் விழிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் நிலைய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (உ-110)

## வீட்டுக் கழிவுகளை ரயில் பாதைகளில் வீசும் பொது மக்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலனி சைவ மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ரயில் பாதை பொது மக்கள் கொட்டும் கழிவுகளால் நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகிறது.

இதனால் பாடசாலை செல்லும் சிறுவர்கள் பல்வேறு இடைஞ்சல்களை எதிர் நோக்குவதுடன் இவர்கள் போடும் தடி மற்றும் கண்ணாடித்துண்டங்களால் காயமடைய வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

இதேசமயம், அயலில் வசிக்கும் குடிமக்கள் சிலரே இவ்வாறு பொறுப்பற்ற முறையில் தமது வீட்டுக் குப்பைகளை வீதியில் வீசி வருவதாக தெரியவந்துள்ளது. (உ-25)

## தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவிருக்கும் 2001 ஆம் ஆண்டிற்கான தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி எதிர் வரும் 22 ந் திகதி திங்கட் கிழமை கல்வளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை 22 ந் திகதி காலை 9 மணிக்கு தங்கள் கல்வித் தகமை சான்றிதழ்களுடன் சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச-120)

## வெறிச் சோடிய சந்தை

(சுன்னாகம்)

அண்மையில் அமைக்கப்பட்ட ஏழாலை பொதுச் சந்தை மக்கள் பாவனையின்றி வெறிச் சோடிக் காணப்படுகிறது. (உ-25)

## குடும்பஸ்தர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை

(மண்டைதீவு)

குடும்பத் தகராறு காரணமாக மனமுடைந்த குடும்பஸ்தர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வேலணை 4ஆம்வட்டாரத்தில் வசித்து வந்த 6பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் திருநாவுக்கரசு என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்தவராவார்.

குடும்பத்தில் அடிக்கடி இடம்பெறும் சச்சரவுகளினால் இவர்பலவருடங்களாக தனித்து வாழ்ந்து வந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது. (உ-11)

## வடமராட்சி, அச்சுவேலி, சிற்றூர்திச் சேவைகள் நேற்று இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, அச்சுவேலிப் பகுதியில் இருந்தான தனியார் சிற்றூர்திச் சேவைகள் எவையும் நேற்றைய தினம் இடம்பெறவில்லை.

இருப்பினும் வழமைபோல் தமது சேவைகள் இடம்பெற்றதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், சேவையில் ஈடுபட்ட பேருந்துகள், வழியில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக குறித்த நேரத்திற்கு இலக்கை வந்தடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பாடசாலை சேவையில் ஈடுபட்ட பேருந்துகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (உ)

# இந்திய சமதாக்கட்சியின் உட்பூசல் தீர்ந்து விட்டது

(புதுடில்லி)

இந்திய சமதாக்கட்சியின் உட்பூசல் தீர்ந்து விட்டது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பீஹார் மாநிலத்தில் சமதாக்கட்சியில் நிதீஸ்குமார் அணிக்கும் நான்கு எம்பீக்கள் கொண்ட போட்டி அணிக்குமிடையே உட்பூசல் நடைபெற்றதும், இருதலைவர்கள் தெரிவு செய்யப்பட்டதும் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சமரச முயற்சியில் ஈடுபட்டதும் தெரிந்ததே.

அண்மையில் நடந்த கூட்டமொன்றில் மத்திய வேளாண்துறை அமைச்சர் நிதீஸ்குமார் பேசுகையில் சமதாவின் உட்பூசல் நூர்ந்த பிரச்சினையாகி விட்டது என்று தெரிவித்திருந்தார். (து)

# முதுபெரும் காங். பிரமுகர் ஜிஜேந்திரா காலமானார்

(புதுடில்லி)

அண்மையில் சோனியா காந்தியுடன் இந்தியக்காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிட்டஜிஜேந்திரப் பிரசாத் காலமானார்.

தலையில் இரத்த நாளம் வெடித்ததன் காரணமாக மருத்துவமனையில் சில நாட்கள் இருந்தபோது நேற்று முன்தினம் இவர் காலமானார்.

காங்கிரஸ்கட்சியின் முதுபெருந் தலைவரான இவர் முன்னாள் பிரதமர்களான ரஜீவ்காந்தியினதும் நரசிம்மராவ் போன்றோரினதும் அரசியல் ஆலோசகராகவும் இருந்து காங்கிரஸின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அறுபத்திரண்டு வயதான இவர், பட்னாவில் 1938 ஆம் ஆண்டு பிறந்தவர். காங்கிரஸின் செயலாளராகவும் மாநில சபையின் அங்கத்தவராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். (து)

# வடகொரிய அதிபர் கிங் சீனாவில் தங்கியுள்ளார்

## இரகசிய பயணமாம்

(பீஜிங்)

வடகொரிய அதிபர் கிங், சீனாவில் தங்கியிருக்கிறார் என்றுவானொலிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

அதிபர் கிங் இரகசியமாக வடகொரியாவிலிருந்து சீனாவிற்கு விசேட விமான மூலம் சென்றார் என்றும் அங்கு அவர் ஒரு வாரத்துக்கு இருப்பாரென்றும் முக்கியமான ஆலோசனைகளில் சீனத்தலைவர்களுடன் ஈடுபட்டிருக்கிறார் என்றும் அந்த வானொலிச் செய்தி தெரிவித்துள்ளது.

தென் கொரியாவுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடமுன் வடகொரிய அதிபர் முன்பும், சீனாவிற்கு சென்று ஆலோசினை பெற்று விட்டு வந்தார் என்றும் அண்மையில் தென் கொரியாவுடனும் அமெரிக்காவுடனும் சில பேச்சுக்கள் நடத்த இருப்பதால் அதற்கு முன்னோடியாக சில பிரச்சினைகளைக்கையாள ஆலோசனை பெறச் சென்றிருக்கலாமென்று ஊகங்கள் வெளியாகியுள்ளன. (து)

# மனிதவள மேம்பாட்டிற்கு முக்கிய இடம் அளிக்கவும்

## அமைச்சர் நாயுடு வேண்டுகோள்

(புதுடில்லி)

நாட்டிலே மனித வளமேம்பாட்டிற்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய உள்ளக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரங்கராஜன் நாயுடு நேற்று புதுடில்லியில் நடந்த ஆசிய ஆபிரிக்க ஊரக வளர்ச்சியின் நாற்பத்தெட்டாவது மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் நாயுடு தொடர்ந்து பேசுகையில், மனித வளமேம்பாட்டைவளர்ப்பதற்கு பயிற்சித்திட்டங்களும் கருத்தரங்குகளும் பயிலரங்குகளும்நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதிகமக்களைக் கொண்டுள்ள ஆசிய ஆபிரிக்க பிரதேசங்களில் வறுமை எழுத்தறிவு போன்றவற்றை வளர்க்க மனிதவள மேம்பாட்டு அமைப்புகள் தொழிற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (து)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல. 6

முழுப் பெயர்; ..................... — ..  ................ —

முகவரி; ........................ ............

...... ————————————

பிறந்த திகதி: ——————————

போட்டியாளர் கையொப்பம் ——————————

————————————————

பெற்ற புள்ளிகள்: ———————

10ம்திகதி 'வலம்புரி'யில் வெளியான உலகதரிசன அறிவுப் போட்டி - 06 வினாக்களுக்குரியவிடைகளுடன் மேல்க்காணும் கூப்பனை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

## ஜம்மு காஷ்மீரில்,

# விமான நிலையத்தாக்குதலில் இரு தீவிரவாதிகள் பலியாகினர்

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்கியதில் இரண்டு தீவிரவாதிகள்பலியாகியுள்ளனர். ஒன்பதுபடை வீரர்கள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம பொலிஸ் உடையணிந்த நாலுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஜீப்பில் வந்து ஸ்ரீநகர் விமான நிலைய வாசலை அடைந்து சரமாரியாக கைக்குண்டுகளை வீசினர் காவல் படையினர் திருப்பிச் சரமாரியாகச் சுடத் தொடங்கினர். சில மணி நேரம் நீடித்த இந்த மோதலில் இரண்டு தீவிரவாதிகள் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றும் சில தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர்.

பகல் சுமார் மூன்று மணியளவில் நடந்த இந்த மோதலில் நான்கு பெண் படையினருட்பட ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

முதல்வர் பாறுக்அப்துல்லா கொலை முயற்சியை அடுத்து இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

இதனை வன்மையாகக் கண்டித்ததுடன் தீவிரவாதிகளுடன் எந்தப் பேச்சு வார்த்தையும் இப்போதைக்கில்லையென்று காஷ்மீர் முதல்வர் தெரிவித்தார்.

இதே வேளை, தீவிரவாத இயக்கமான இலங்கரி தொய்பா இயக்கமே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பு என்றும், முதல்வரைத்தாக்கியதும் தாமே என்றும் தெரிவித்துள்ளது. (து)

**உலக தரிசனம்**

## இந்தோ. அதிபர் குற்றச்சாட்டிற்கு பதிலளிப்பார்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரகுமான் வாஹிட் தம்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க முன்வந்துள்ளார்.

இந்தோனேஷிய நாடாளுமன்ற உறுப்பினர் தனது மாளிகைக்கு வரும்படியும் அங்கு தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு தக்கபதிலை தெரிவிப்பதாகவும் அறிவித்துள்ளார். (து)

**செய்திப் பரல்**

★ யூதக் குடியானவர் ஒருவர் கடந்த ஞாயிறன்று கொல்லபட்டதை அடுத்து இஸ்ரேலிய அதிகாரிகளால் யாதுப பகுதி முழுவதும் மூடப்பட்டது பலஸ்தீனத்தின் மீது தொடர்ந்தும் பதில் தாக்குதல் நடைபெறுகிறது

★ ஆசிய நாடுகளுக்கிடையிலான நட்புறவு ஐரோப்பிய நாடுகளை விட குறைவானது என ஜேர்மன் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ எல்சல் வடோரில் தொடர்ந்தும் ஏற்டும் மின் அதிர்வுகளினால் மீட்பு வேலைகள்பாதித்ததோடு இறந்தவரின் எண்ணிக்கை 1000 த்தினைத் தாண்டும் என அறிவிக்கப்படுகிறது.

★ கொங்கோ ஜனாதிபதி லோரன்ஸ்கபிலா மரணமடைந்து விட்டார். கடந்த செவ்வாயன்று அவரது மெய்ப்பாது காவலரின் சூட்டுக்கு இலக்காகியதாலேயே இச்சம்பவம் நடந்தது.

★ எகிப்தில் நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவத்தில் இரு பொலிஸ் அதிகாரிகள அந் நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள

★ 51 ஆண்டுகளுக்கு முன் நடந்த கொரிய யுத்தத்தில் 248 தென்கொரிய மக்களை அமெரிக்க படைகள் சுட்டுக் கொன்றதற்காக தற்போது கிளின்டன்வருத்தம் தெரிவித்துள்ளார்.

## எல்சல்வடோருக்கு

# நாலா திக்கிலும் இருந்து நிவாரண உதவிகள்

(எல்சல்வடோர்)

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மத்திய அமெரிக்க எல்சல்வடோரிற்கு நிவாரண உதவிகள் வந்து குவிந்தபடி இருக்கின்றன.

எல்சல்வடோரின் அதிர் பலநாடுகளையும்உதவி தரும்படி கேட்டிருந்தார் அதனைத் தொடர்ந்து உலகநாடுகள் பலவும் உதவிகளை அனுப்பத் தொடங்கியுள்ளன.

இதேவேளை மீட்புப்பணிகளும் நிவாரணப் பணிகளும் தொடர்கின்றன எல்சல்வடோருக்கு பிரேதப் பெட்டிகளைஉடன்அனுப்பிவைக்கும்படிநாட்டின் அதிபர்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவரை ஐந்நூறுபேர் இறந்து விட்டார்களென்றும் ஆயிரத்துக்கு மேற்பட்டோரைக்காணவில்லையென்றும் அவர்களும் இறந்திருக்கக் கூடுமென்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# விளையாட்டுச் செய்திகள்

## சார்க் போட்டிகள்

தெற்காசிய விளையாட்டு விழா இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் பாகிஸ்த்தானில் நடைபெற உள்ளது. 400 மில்லியன் பாகிஸ்த்தான் ரூபா செலவில் இந்த விளையாட்டு விழா நடைபெற உள்ளதாக விளையாட்டு ஏற்பாட்டுக்குழு தகவல் வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை நடைபெற இருக்கும் 9 ஆவது சார்க் விளையாட்டு விழாவில் 15 போட்டிகள் இடம்பெற உள்ளன. இதற்கு முன் 1989 இல் சார்க் விளையாட்டுப் போட்டி பாகிஸ்த்தானில் நடைபெற்றது. இதில் இந்தியாவும் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 23 ஆவது சதம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தலைவர் ஸ்ரீவோ டெஸ்ட் போட்டிகளில் 23 ஆவது சதத்தினை அடித்துள்ளார்.

## புதிதாக உருவாகும் கிரிக்கெட் அரங்கு

இலங்கையின் மத்திய மாகாணத்தில் புதிதாக ஒரு சர்வதேச கிரிக்கெட் அரங்கு உருவாக்கப்படுகிறது. சகல வசதிகளையும் கொண்ட இவ் அரங்கு வரும் மார்ச் 23 இல் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

# வங்க மக்களின் பாதுகாப்புக்கு குடியரசு ஆட்சி வேண்டும்

## பல கட்சிகள் வலியுறுத்தல்

(குல்கத்தா)

மேற்கு வங்காளத்தில் மக்களின் உயிர் உடமைகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்காக குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வர வேண்டும் என்று திருநாமல் காங்கிரஸ் தலைவர் மமதா பணார்ஜி தெரிவித்தார்.

மத்திய ரயில்வே அமைச்சரான மமதாவும் மற்றும் பிஜேபி தெலுங்கு தேசம்கட்சியினரும் இணைந்து பிரதம மந்திரியிடம் வங்க அரசைக் கலைக்க வேண்டுமென்றும் அங்கு வன்முறைகள் கூடிவிட்டனவென்றும் குடியரசுத் தலைவர்ஆட்சியைக்கொண்டு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். (து)

'செடுவல்யான் என்பது
அறிக தன் நெஞ்சம்
நடு ஒரீஇ அல் செயின்''
— குறள்

# வலம்புரி

## இது தான் தமிழர் நிலை

யாழ். பல்கலைக் கழக சமூகத்தினால் நேற்றைய தினம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடை பெற்றது. பொது அமைப்புகள், பள்ளி மாணவர்கள், மதகுருமார்கள் என்று பலரும் கலந்து கொண்டு சமாதானத்தை, -யுத்த நிறுத்தத்தை வலியுறுத்த இருந்தனர். ஆனால் முடியவில்லை பல்கலைக் கழக சமூகத்தினர் மட்டும் கலந்து கொள்ளும் அளவிலேயே எழுச்சி நிகழ்வு நடை பெற்றது.

சமாதானத்தை — சண்டை வேண்டாமென் பதைக் கூட கூறும் தரம் தமிழர்க்கு இல்லை என்பதையே இது காட்டி நிற்கிறது. பாதுகாப்பு படையினர் யாழ். பல்கலைக் கழக வளாகத்தை சுற்றி நேற்று பாதுகாப்பு வேலி போட்டிருந்தனர், கவச வாகனங்கள்சகிதம் ஏதோவொருபெரும் கலகத்தை- அடக்குவது போல் காட்சி கொடுக்கப்பட்டது. வட புலத்தில் தமிழர்களின் அவல நிலையை இது தெளிவு படுத்தியுள்ளது- நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்க்கும் ஜே.வி பி, சிஹல உறுமய போன்றவை ஆர்ப்பாட்டம்செய்ய, நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சோலிற்குக் கொடும்பாவி எரிக்க முடியுமாயின் சமாதானத்தை வலியுறுத்தும் பல்கலைக் கழக சமூகத்தின் எழுச்சிப் போரை நடத்தும் உரிமை மறுக்கப்பட்டதன் காரணம் என்னவென்பதை ஆராய்ந்தால் இலங்கையில் தமிழர் இரண்டாந் தரப் பிரஜைகளாக வே வைக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு இம் மண்ணில்சொந்தமில்லை, உரிமையில்லை, ஜனநாயக வழியில் போராட அனுமதியில்லை என்பதை வெளிப்படையாக — நேரடியாகக் காட்டி விட்டது.

—இனப் பிரச்சினைக்குத் தீர்வு அரசியலமைப்புச் சீர் திருத்தமேயெனக் கூறும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு அச் சீர்திருத்தத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கவில்லையெனக் குற்றம்சாட்டியது. உண்மையான விசுவாசத்தோடு தமிழர்களுக்கு உரிமையை வழங்கக் கூடியதான அரசியலமைப்பை தயாரித்த அரசினால் யாழ். பல்கலைக் கழக சமூகத்தின் பொங்கு தமிழ் எழுச்சிக்கு அனுமதி வழங்க முடியாது போய்விட்டதெனில் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு எந்தளவு தூரம் தமிழர்க்கு உரிமை வழங்கும் என்பதை உலகு புரிந்துகொள்வதில் கடினமிருக்காதென நம்பலாம்.

# தென்மராட்சி மக்களின் கல்விக்கண் திறக்க

# பெரும் பங்காற்றிய டிறிபேக் கல்லூரி

**பொ. ச. ஞானசீலன்**
(பழைய மாணவர் டிறிபேக் கல்லூரி)

இற்றைக்கு நூற்று இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில ஓர் அறிவுக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது அந் நாளைய சாவகச்சேரி மஜிஸ்ரேட் நீதி மன்ற நீதவான் ஜே. எஸ். டிறிபேக் அவர்கள் ரூபா ஐந்நூறு அன்பளித்து இம் முயற்சிக்கு வித்திட்டார். பரோபகாரர்களின் அன்பளிப்பினாலும் அமெரிக்க மிஷன் ஊழியர்களின் ஒத்தாசையினாலும் பற்றை சூழ்ந்த சாவகச்சேரி பிரதேசத்தில் 1875 ஆம் வருடம் ''டிறிபேக்'' பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் தலைமை ஆசானாக சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை ஊழியன் வண ரி பி. ஹன்ற் பொறுப்பேற்றார்.

### கல்லூரியானது

இப் பாடசாலையின் நிர்வாகத்தை அமெரிக்கன் மிஷனரிமார் பொறுப்பேற்றனர். இந் நிறுவனம் தென்மராட்சி மக்களின் கல்விக் கண்ணை திறக்க உதவிற்று. சாவகச்சேரியின் நாலா திக்கிலிருந்தும் மாணவர்கள் டிறிபேக் நோக்கித் திரண்டனர். ஆங்கில அறிவூட்டும் கல்விச் சாலைகளில் ஒன்றாக ''டிறிபேக்'' திகழ்ந்தது. நாளடைவில் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு கல்லூரி அந்தஸ்தைப் பெற்றது மாணவர்கள், ஆசிரியர்கள் தொகை அதிகரித்ததுடன் எஸ். எஸ். ஸி (தற்போதைய க. பொ. த. சாதாரணதர) வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்பட்ட ஒரு சில பாடசாலைகளுள் டிறிபேக் ஒன்றாக அமைந்தது இட நெருக்கடி காரணமாக விளையாட்டு மைதானம் சில காலம் கல்லூரியிலிருந்து சிறு தொலைவிலுள்ள ''மகிழங்கேணி'' என்னும் பிரதேசத்தில் அமைந்திருந்தது. கல்லூரி ஸ்தாபகர், முன்னாள் அதிபர்களை நினைவு கூரும் முகமாக விளையாட்டுப் போட்டிகள் 'டிறிபேக்'' 'ஹன்ற்' ''சின்னத்தம்பி'' ''எபிரகாம்'' எனப் பிரிக்கப்பட்டு நடைபெறுவது வழக்கம் டிறிபேக் கல்லூரியின் முதன்மைப் பாடசாலையாக விளங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் டிறிபேக் மாணவர்கள் தமது உயர் நிலைப் படிப்பினை மேற்கொண்டு பட்டதாரிகளாகவும் தேறினர். பாடசாலையின் வருடாந்த சஞ்சிகை 1940 ஆம் வருடம் முதல் மாணவர்கள் படைப்புகளுடன் வெளியாகத் தொடங்கியது.

### பவளவிழா

டிறிபேக் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அமெரிக்கன் மிஷன் நிறுவனத்தினரால் நிர்வகிக்கப்பட்டு, பின்னர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக யாழ் தென்னிந்திய திருச்சபை ஆதினத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. இந்நிலை 1960 ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது 1960 ஆம் வருடம் பதவியேற்ற அமரா சிறிமாவோ அரசாங்கத்தினால் கல்லூரி ஓர் அரசாங்க பாடசாலையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1950 ஆம் வருடம் கல்லூரியின்'' பவளவிழா'' நினைவு மலர் வெளியீட்டுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1960 களின் பிற்பகுதியில் க. பொ. த உயர்தர வகுப்புகள் நடத்துவதற்கான அனுமதி கல்விப்பகுதியினால் கல்லூரிக்கு வழங்கப்பட்டது இதன் பலனாக மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரிப் படிப்பினை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

### தொண்டும் தியாகமும்

எமது கல்லூரியின் சின்னம் விளக்கு. மக்கள் மருள் நீக்கி அருள் வழங்க வேண்மென்ற உன்னத நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே எமது அறிவுக்கூடம், கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த சான்றோர் பலர். அதிபர்கள், ஆசிரியர்கள், முகாமையாளர்கள், கல்வி அதிகாரிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மக்கள் பிரதிநிதிகள் என பல சிறந்தோர் எமது அன்னை ''டிறிபேக்'' வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று செயலாற்றினர். இன்றும் செயலாற்றுகின்றனர். அவர்கள் தொண்டும் தியாகமும் தென்மராட்சியின் கல்வி வளர்ச்சிக்கு வியத்தகு பலனை அளித்தமை கண்கூடு. இந்த நாட்டிலும் உலகின் பல பகுதிகளிலும் எமது கல்லூரி மாணவர்கள் வகிக்கும் பொறுப்பான பதவிகளால் கல்லூரியின் சிறப்பு துல்லியமாக விளங்குகின்றது.

### வாழ்வும் வளமும்

இவ்வாண்டு எமது கல்லூரியின் 125 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை சிறப்புறக் கொண்டாட பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. எனினும் அஃது நிறைவேறாமற் போனமை துர்ப்பாக்கியமே. ''டிறிபேக்'' உருமாறிக் காட்சியளிப்பினும் தம் பிள்ளைகளின் வாழ்வையும், வளத்தையும் கண்ணுற்று நெஞ்சாரப் பூரிப்படைவாள் என்பது திண்ணம்: டிறிபேக் அன்னை'' கல்லூரியுடன் தொடர்புடைய அனைவரினது நெஞ்சங்களிலும் நிலைத்து நிற்கின்றாள்.

கால ஓட்டத்தில் எவை மறக்கப்படினும் கல்விச் சுடர் ஏற்றிய நிறுவனங்கள் மறக்கப்படுவதுமில்லை, மறைக்கப் படுவதுமில்லை, 125 ஆம் ஆண்டு காலத்தில் டிறிபேக் கல்லூரியுடன் தொடர்புகொண்டு அதன் வளர்ச்சிக்காக பணியாற்றிய சகலரையும் நினைவிற் கொள்ளல் சாலப் பொருந்தும் டிறிபேக் அன்னை புதுப் பொலிவுடன் எதிர்வரும் காலங்களில் திகழ வேண்டுமென்ற ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வள்ளுவரின் உயர்நோக்குடன் கல்லூரியின் 125 ஆம் ஆண்டு நிறைவினை மனதார நினைவு கூர்வோமாக!.

''ஞானமே உருவாம்
டிறிபேக்கல்லூரியை
நாடியே நாம் துதிப்போம்''

---

## சமூக விழிப்புணர்வு துண்டு பிரசுரம்

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற நடு நிலைய இயக்கமும் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறையும் இணைந்து ''சமூக விழிப்புணர்வு'' என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

மது போதை, புகைத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்காக அதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மக்கள் உணர்ந்து அவற்றைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளைக் கைக்கொள்ளக் கூடிய வகையில் இத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ச-59)

# நாட்டிலுள்ள, எந்தவொரு பாடசாலையையும் புறக்கணிக்க இடம் கொடேன்

## கல்வியமைச்சர் உறுதி

(கொழும்பு)

நாட்டில் எந்தவொரு பாடசாலையையும் புறக்கணிக்கப்படவோ அன்றி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படவோ ஒரு போதும் இடமளிக்கமாட்டேன் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் பல்வேறு குறைகள் தொடர்பாக கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி பிரதியமைச்சர் எம். பி முகைதீன் அப்துல் காதர் கல்வியமைச்சருடன் கொழும்பில் நடத்திய கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இன்று வடக்கு-கிழக்கிலுள்ள பாடசாலைகள் உட்பட ஏனைய பிரதேங்களிலுள்ள பல்வேறு பாடசலைகளிலும் பலகுறைபாடுகள் நிலவுவது குறித்து எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் நிலவி வரும் குறைகளை நானே நேரில் சென்று அவதானித்து வருவதுடன் அவற்றை உடன் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

புறக்கணிக்கப்படும் பாடசாலைகள் குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்படின் அவற்றிற்கு உரிய பரிகாரம் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்துள்ளார். (உ)

## சாயி அருளமுதர்



மனிதன் பணத்தினால் அடிமையாக்கப்பட்டுள்ளான் அவன் ஒரு மேலோட்டமான, வெறுமையான, செயற்கை வாழ்க்கையை நடத்துகிறான். இது மிகவும் பரிதாபத்துக் குரியதாகும். தான் வாழ்வதற்கு மிக அவசியமாக எவ்வளவு பணம் தேவைப் படுமோ அவ்வளவு பணத்தையே மனிதன் வைத்திருக்கவேண்டும். ஒருவர் வைத்திருக்கும் செல்வத்தின் அளவை ஒருவர் வைத்திருக்கும் பாத அணிகளுடன் ஒப்பிடலாம். மிகவும் சிறியதாக இருந்தால், நோவை ஏற்படுத்தும், மிகவும் பெரியதாக இருப்பின் நடப்பதற்குத் தடங்கலாக இருக்கும். உடலுக்கும், உள்ளத்துக்கும் சௌகரியத்தைக்கொடுக்கக்கூடியவாழ்க்கையை நடத்துவதற்கு மட்டுமே போதுமான பணம் எம்மிடம் இருக்கவேண்டும். ஆனால், அதிகம் இருந்துவிட்டாளோ, தற்பெருமை, சோம்பல், பிறரை இகழ்வாக மதிக்கும் மனோபாவம் ஆகியவற்றை அது விருத்திசெய்யும்.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

# படையினர் பணிப்பில் கடைகள் திறப்பு

(ஆவரங்கால்)

அச்சுவேலி நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் நேற்று படையினரின் பணிப்பின் பேரில் திறக்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது.

மேற்படி பகுதி வர்த்தகர்கள், பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்களை பூட்டியிருந்தனர்.

இதனை அவதானித்த படையினர், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர் வீடுகளுக்குச் சென்று, வர்த்தக நிலையங்களைத் திறந்து வழமையான பணிகளை நடத்துமாறு பணித்ததைத் தொடர்ந்து இயல்பு நிலை திரும்பியது. (உ-57)

# புலிகளுக்கு நிதி கிடைப்பதை ஆராய்வதில் இந்தியா முயற்சி

## விசேட பணிப்பாளர் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு எங்கிருந்து நிதி கிடைக் கின்றது என்பதனைக் கண்ட றியுமாறு பதினேழு நாடு களை நாம் கோரவுள் ளோம்.

இந்திய மத்திய விசார ணைப்பிரிவின் விசேட பணிப் பாளர் ஜீ. ஆச்சாரி, இந் திய வெளிநாட்டுச் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டி யில் இதனைத் தெரிவித்துள் ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது;

சுவிஸ்லாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், இலங்கை உட்பட பதினேழு நாடுகளிடம் சட்டவிரோத மாக விடுதலைப் புலிகளுக்கு நிதி கிடைப்பதைக் கண்ட றிய உதவுமாறு இந்திய மத் திய விசாரணைப் பிரிவு உத்தி யோக பூர்வமாக கோர வுள்ளது.

1991ம் ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட் டதையடுத்து, 1998ல் நிறு வப்பட்ட ஜெயின் ஆணைக் குழு வெளியிட்ட அறிக்கை யில் விடுதலைப் புலிகளுக்கு எங்ஙனம் நிதி கிடைக்கிறது என்பதனைக் கண்டறியு மாறு கூறியிருந்தது.

இவ்விடயம் குறித்தே மேற் படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் லிகளின் சட்ட விரோத நிதி சேகரிப்புடன் சந்திராசுவாமி மற்றும் சில ரின் பங்கு தொடர்பாக, விசாரணைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் ஆச்சாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழீழ விடுத லைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை இலங்கை யிலிருந்து நாடு கடத்துவது தொடர்பான விவகாரம் நீண்டதொரு நடவடிக்கை எனினும் அந்நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுத் துச் செல்லப்படுமென மத் திய விசாரணைப் பணியகப் பணிப்பாளர் ஆர். கே. இரா கவன் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ

### பல்கலைக்கழக

களை பிரதி பலிக்கும்.

இவ்வாறு பல்கலைக்கழக சமூகத்தினரால் வெளியிடப் பட்டுள்ள பொங்கு தமிழ் பிரகடனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அப்பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதா வது;

தமிழ் தேசியம், மரபு வழித்தாயகம், சுயநிர்ண யம் இவற்றினை அங்கீகரிக் கும் நீதியானதோர் அரசி யல் தீர்வினை நாம் காண வேண்டும்.

சர்வதேச சமூகமே! நீண்ட கால அடக்கு முறைக்குள் பயந்து உறைந்து போயுள்ள எமது மக்களின் உண்மை யான, மனஉணர்வுகளை அபிலாசைகளை உரியவாறு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீதியான அமை தியான எங்கள் வாழ் விற்கான தீர்வினை காண பதில் உங்கள் மனச்சாட்சி உரியவாறு பேசவேண்டும்.

இப்பொங்குதமிழ் பிரக் டனத்தில் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம், மாணவர் சங்கம், ஊழியர் சங்கம் தொழில்நுட்பவியலாளர் சங் சம். எழுதுவினைஞர் சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

(வ-12-43)

### யுத்த...

சூழலும் இப்பொழுது கனிந் துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப் பினரும் முன்வந்துள்ளனர். ஒரு பக்கத்தில் போர் நிறுத் தம் செய்யப்பட்டுள்ளது. இதனை ஏற்று மறுபக்கமும் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்து சமாதான முயற்சி களை முன்னெடுக்க வேண்டு மென பல்கலைக் கழக சமூகம் கேட்டுக் கொள்கிறது.

இது தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகை யில் அமைய வேண்டும், இந்த அபிலாஷைகளில் இரு பகுதி யினரும் திருப்திபெற்றவர் களாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

இந் நிகழ்வில் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர், மாணவர் சங்கத் தலைவர், தொழில் நுட்ப வியலாளர் சங்கத்தலைவர், ஊழியர் சங்கம், எழுதுவினை ஞர் சங்கத் தலைவர் ஆகி யோரும் உரையாற்றினார் கள். (வ-12-43-59-83-104)


**ஸ்ரீசெல்வா**

(யாழ்ப்பாணம்)

விஜயகாந்த், நாசர், பிரகாஷ்ராஜ், ரம்யா நடித்த

**வாஞ்சிநாதன்**

(புதிய வெளியீடு)

10-30, 2-30 (ப. நே)


### நீவக பாடசாலைகளும் செயலிழப்பு

(ஊர்காவற்றுறை)

நேற்றைய தினம் வேல ணைப்பகுதியில்உள்ள அனைத் துப் பாடசாலைகளும் செயலி ழந்து காணப்பட்டன.

மேற்படி பகுதியில் இயங் கும் முக்கிய பாடசாலைக ளில் மாணவர்கள் எவரும் சமூகம் கொடுக்கவில்லை.

பல்கலைக்கழக மாணவர் ஏற்பாட்டில் நேற்று இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ் விற்கு ஆதரவு தெரிவித்தே மாணவர்கள் பாடசாலையை புறக்கணித்ததாக தெரியவத் துள்ளது. (உ-75)

### கனடாவிலும்...

பெறவுள்ள இப்போராட்டம் கனேடிய வெளி விவகார அமைச்சருக்கு எதிரான போ ராட்டமல்ல எனவும், இலங் கையின் இன விவகாரத்தில் கனடாவை ஈடுபடுத்துமா றும், அதற்கு வெளியுறவு அமைச்சரை உதவுமாறும் அழைப்பு விடுப்பதற்காகவே மேற்படி போராட்டத்தை வெளியுறவு அமைச்சு அலுவ லகத்துக்கு முன்பாக நடாத்த வுள்ளதாகவும் கனடா பல் கலைக் கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

### 21சடலங்கள்-,.

டையதெனவும் வைத்திய சாலைவட்டாரங்கள்தெரிவித் துள்ளன.

இதேவேளை நேற்று முன்தின மிரவு யாழ்போதனவைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்ட 20 சடலங்களும் நேற்றுபகல் 10 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரால் கல் முனைக டற்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளி ஒப்படைக் சப்பட்டதாகவும் தெரிவிக்கபடுகிறது(ம 12,77

### ஆனையிறவை...

பகுதியூடாக பலாலிப் படைத் தளத்திற்கு எடுத்துச்செல் லப்படுவதாகவும் பின் அங் கிருந்து விமானமூலம் காயப் பட்டவர்களையும் கொல்லப் பட்டவர்களையும் கொழும் புக்குக் கொண்டு செல்வ தாகவும் தெரிவிக்கப்படுகி றது.

ஆனையிறவுத் தளம் கைப் பற்றப்படும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என வும் பத்து சதுரகிலோமீற் றர் கைப்பற்றப்பட்டதாக வும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (வ)

### தமிழர்...

யும் மீறி மதில் ஏறிக் குதித்து எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இச் சம்பவத்தின் போது பாடசாலை மாணவர்களி னால் பல்கலைக் கழக வள விற்கு வெளியில் விடப்பட் டிருந்த நூற்றுக் கணக்கான சைக்கிள்களை இராணுவத் தினர் ட்ரக் வண்டியில் ஏற் றிச் சென்றதாகவும், பின்னர் பல் கலைக்கழக மாணவர் களின் தலையீட்டினால் சைக் கிள்களை திருப்பி பொலிசார் ஒப்படைத்ததாகவும் தெரி விக்கப்படுகிறது.

#### ★தறப்பத்துணியினால் வாய் கட்டிய மாணவர்கள்

பல்கலைக் கழக நுழை வாசலில் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் தமது வாய்களை கறுப்புத் துணிகளினால் கட்டியவாறு நிகழ்வில் கலந்து கொள்ள வந்த ஆர்வலர்களைவரவேற் றனர்.

பல்கலைக்கழக வளவினுள் நுழையமுற்பட்ட பொது மக்களைப் பொலிசார் தடுத்து நிறுத்தியபோது அவர் கள் அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தனர்.

பல்கலைக் கழகவளாகத்தில் தமிழரின்அபிலாசை சுயநிர் ணயஉரிமை யுத்தத்தைநிறு த்தி புலிகளுடன்பேசு என்ற வசனங்கள் அடங்கியபதாதை கள் கட்டப்பட்டிருந்தன தமிழ்மக்கள் ஒரேகொடியின் கீழ்உள்ளார்கள் என்பதைச் சித்தரிக்கும் வகையில் கம்பம்ஒன்று நிறுத்தப் பட்டு அதில் நலா பக்கமும் சிவப்பு மஞ்சள் நிறக்கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன. மாணவர்களி னால் சுதந்திர கீதம் இசைக் கப்பட்டது.

#### வடமராட்சி பல்கலை மாண வர்கள் தடுத்து நிறுத்தப்பட் டனர்

வடமராட்சிப் பகுதியில் இருந்து வந்த பல்கலைக்கழக மாணவர்கள் வல்லைவெளி யில் நீண்டநேரமாக தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந் தனர். அதிகாலை 6 மணி முதல் பருத்தித்துறையில் இருந்து வந்த பஸ் வண்டி கள் நீண்டநேரம் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதிகளில் இடை இடையே சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வீதியால் வருவோர் போவோர் எல் லோரும் தீவிர சோதனைக் குட் படுத்தப்பட்டனர். இத னால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது.

#### வர்த்தக நிலையங்கள் பூட்டு

இந்நிகழ்வை ஒட்டி வடம ராட்சி மற்றும் யாழ்ப்பா ணத்திலும். வர்த்தக நிலை யங்கள் பூட்டப்பட்டு ஆதரவு தெரிவிக்கப்பட்டிருந்தது பாடசாலைகளும் நேற்று முழுநாளும் இயங்கவில்லை என்று எமது பிரதேச் செய்தி யாளர்கள் தெரிவிக்கிறார் கள்.

பொங்கு தமிழ் நிகழ்வு எந்தவிதமான அசம்பாவிதங் களும் இன்றி அமைதியாக, உணர்வு பூர்வமாக அனுட் டிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

(வ-12-37-43-5989-104)

# மிருசுவில் சென்ற குழு திரும்பியது

(மந்திகை)

மிருசுவில் வடக்குப்பகு தியில் இடம்பெற்றபடு கொலை சம்பவம்தொடர் பாக எட்டுசடலங்கள் தோ ண்டி எடுக்கப்பட்ட புதைகுழி இடங்களை அளவிடுவதற்கு சென்றகுழு அளவீடுசெய்யா மல் திரும்பியுள்ளது.

சாவகச்சேரி நீதவான்அ. பி ரேம்சங்கரின் உத்தரவின் பேரில் அங்குநிலவியயுத்தசூழ் நிலை காரணமாக சென்ற குழுவினர் திரும்பிவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கொடிகாமம் பொலிசார் படுகொலைச்சம்பவம் தொ டர்பான முக்கிய சாட்சி பொன்னுத்துரை மகேஸ் வரனை சம்பவம்நடைபெற்ற இடத்துக்கு அழைத்துச்சென் றுள்ளனர்.

இவர்களுடன் ஈ.பி.டி.பி யைச்சேர்ந்த ஐயத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் அலெக்சாண் டர் சாள்ஸ் ஆகியோரும் உடன்சென்றிருந்தனர்.

(வ23)

# ★ பிரிட்டனில் விடுதலைப்புலிகளை தடை செய்ய வேண்டாமென தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை!

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக் கத்தை பிரிட்டனில் தடை செய்வது குறித்து பிரித்தா னிய தூதரக அதிகாரிகள் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதி களைச் சந்தித்து கருத்துக் களைக் கேட்டுள்ளனர்.

இலங்கைக்கான பிரித்தா னிய தூதுவர் மார்டின் கில்ஸ், தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச்செயலாளர் கதிரேசன் வின்சன் ஆகியோரும் செவ் வாய்க்கிழமை மாலைசந்தி த்துப்பேசியுள்ளனர்.

தமிழர் விடுதலைக்கூட் டணி அகிலஇலங்கைதமிழ்க் காங்கிரஸ் .ரெலோ ஆகிய கட்சித்தலைவர்களைச் சந்தி த்து விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது குறித்துஅது தொடர்பான அபிப்பிராயம் என்னவென்று கேட்டுஅறிந் துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதி நிதிகள் விடுதலைப்புலிகளை தடைசெய்யக் கூடாதென கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான போராட்டத்தைக் கைவிட வேண்டுமெனவும் அவர்களை கைதுசெய்யக் கூடதென வும் தெரிவித்துள்ளனர். விடு தலைப்புலிகளை நம்பலாமா? என்று பிரித்தானியா தூதுவர் கேட்டதாகவும் அரசை நம் பக்கூடிய சூழ்நிலை காணப் படுவதாகவும் விடுதலைப் புலிகளை தடை செய்யக் கூடாதெனவும் கோரியுள்ள னர்.

தமிழ்க் கட்சித் தலைவர் களைப் புலிகள் கொண்றுள் ள போதும் அதை நாம் தற் போது ஆதரிக்க வேண்டிய நிலைஇருப்பதாகவும்எம்மால் அதனையும் சாதிக்க முடி யாத நிலையில் இருக்கிறோம் என்றும் புலிகளை ஆதரிப்ப தன் மூலம்தான் இனப்பிரச் சினைக்கு சரியான தீர்வு காணமுடியும் என்றும் தமிழ் கட்சித் தலைவர்கள் பிரித் தானியாத் தூதுவரிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 4 மணிநேரம் இச் சந்திப்பு இடம்பெற்றது. (வ)


அன்பு வாசகர்களே!

**உங்கள் வலம்புரியில்...**

யாழ். மண்ணில் நடுவு நிலையோடு உண்மைச் செய்திகளை தரும் உங்கள் ''வலம்புரியில்'' தின சரி விசேடமாக எதிர்பாருங்கள்

ஞாயிறு — சோதிட பலன், பரமபிதா காட்டிய பாதை.
திங்கள் — குருஷேத்திரம்.
செவ்வாய் — மருத்துவ விளக்கம்.
புதன் — தரம் 5 மாணவர்களின் புல மைப் பரிசில்பரீட்சை வினா - விடைகள்.
வியாழன் — மறைந்தார் மாண்பு, பகவான் சிந்தனைகள்.
வெள்ளி — பொது அறிவு, சைவசிந்தனை
சனி — திறனாய்வுக்களம்.

இவற்றுடன்

★ பொது அறிவுப்போட்டி
★ உலக தரிசனப்போட்டி
★ கவிதைப்போட்டி
★ விரைவில் சிறுகதைப்போட்டி

இன்றே உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

24-01-2001 (புதன்கிழமை முதல்) தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரீட்சை வினா - விடைகள் வெளிவரும்.


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 11 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.